Adjournment of Criminal Cases.

@ * 101. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state :

(*a*) whether it has been brought to the notice of the Government that several criminal cases pending in Magistrates' Courts get adjourned, solely because the Reserve Police Escorts intended to appear in the cases, are drafted for other duties; and

(*b*) if so, the action taken by the Government, to avoid such inconvenience to the Courts?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆமாம், ஐயா.

(இ) அமளி, கதவடைப்பு மற்றும் வேலை நிறுத்தம் ஆகிய பல காரணங்களுக்காக காவல்துறையினர் பந்தோபஸ்து அளிப்பதால், அவர்களின் பணிச்சுமை தற்போது அதிகரித்து உள்ளது. இருந்தபோதிலும், பாது காப்புக்காகச் செல்லும் காவலர் புறக்கணிக்கப்படாமலிருக்க தகுந்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 10-50)

திரு. த. சந்தோஷம் : 'ஜெயில் விசிட்டர்' என்ற முறையில் சமீபத்தில் மதுரை மத்திய சிறைச்சாலைக்கு நான் சென்றிருந்தபோது, 65 வயதடைந்த வயோதிகக் கைதியைச் சந்தித்தேன். சந்தேகக் கேசின் பேரில் பிடிக்கப் பட்ட அவர் 9 மாதங்களாகச் சிறையில் இருப்பதாகச் சொன்னார்கள். அவருடைய வழக்கு இன்னமும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று சொன்னார். இதைப்பற்றி சிறை அதிகாரிகளை விசாரித்தபோது, அங்கு பணிபுரியக் கூடிய காவலர்கள் எஸ்கார்ட் ட்யூட்டிக்காகவும், திருவிழா பணிக் காகவும் போக வேண்டியிருப்பதால்தான், காலதாமதம் ஏற்படுவதாகச் சொன்னார்கள். ஆகவே மத்திய சிறைச்சாலையில் உள்ளவர்களை அது போன்ற பணிகளுக்கு அனுப்பாமல் மற்ற காவல் துறையைச் சேர்ந்தவர்களை அப்பணிகளுக்கு நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சிறைச் சீர்திருத்தம் என்கிற வகையில் இதைப்பற்றியெல்லாம் அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அது விவரமாக வெளிப்படும்போது, இதற்குச் சரியான பதில் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

@ 28—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப் பட்டது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: திறந்தவெளி சிறைச்சாலையை அமைத்துச் சீர்திருத்தம் செய்யும்போது, நம்பிக்கைக்குரிய கைதிகள் அவர்களாகவே நீதிமன்றத்திற்கு வந்து போக அனுமதிக்கும் நிலை வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சில சமயம் போராடுவதற்கு சிலர் தாங்களாகவே வேன்களில் ஏறுவதைப் பார்க்கின்றோம். அது போன்ற நிலைமைகளை எல்லா நேரங்களிலும் எதிர்பார்க்க முடியாது. அப்படிப்பட்டவர்களுடைய பட்டியலை மாண்புமிகு உறுப்பினர் தயார் செய்து கொடுத்தால் கவனிக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி: சிறைச் சீர்திருத்த அறிக்கையை அரசு எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது என்றும் அந்த அடிப்படையிலே சீர்திருத்தங் களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். Justice 'delayed is justice denied' என்ற அளவிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நீண்ட காலமாக சிறையிலேயே இருந்து கொண்டு, நீதிமன்றத்திற்குப் போக முடியாத நிலை இருக்குமானால், எந்தெந்த சிறைச்சாலைகளில் அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கணக்கிட்டு அவர்களையெல்லாம் விரைவாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வழக்கைச் சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்த அரசு உறுதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினரே ஒரு வழக்கறிஞர். பாரதம் தழுவிய அளவில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. குறிப்பாக அண்டர்-ட்ரையல் பிரிசனர்களைப் பொறுத்தவரையில், முசாபர்பூர் ஜெயிலில் உள்ளவர்கள் உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இது குறித்து உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். 1979 ஆம் ஆண்டு மைய அரசு, மாநிலத் தலைமைச் செயலாளர்களை வரவழைத்து இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று ஆய்வு செய்தது. பாரதம் தழுவிய அளவில் ஒட்டுமொத்தமாக 44 இலட்சம் கேஸ்கள் பெண்டிங்காக இருப்பதாக மைய அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரைக்கும், 6,472 வழக்குகள் இது போன்ற நிலையிலே இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். பாரதத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த நிலையை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, தமிழகத் திலே உள்ள நிலைமை எவ்வளவோ பரவாயில்லை என்று இருக்கிறது. இருந்தபோதிலும் இந்தக் குறைபாடு இல்லாமல் இருக்க, காவல் துறையைச்

1981 மார்ச் 5]

சேர்ந்த காவலர்கள் இல்லையென்ற காரணம் இருக்கிறதென்றாலும், தக்க ஆதாரமான காரணங்கள் இல்லாமல் இருந்தால் வாய்தாக்கள் கொடுக்கக் கூடாது என்ற முறையை ஏற்படுத்தி, குறிப்பிட்ட காலத்திற்குள் இத்தனை வழக்குகளை முடிக்க வேண்டும் என்ற வரையறையைக் கொண்டு வர வேண்டும் என்று உயர்நீதி மன்றத்தை மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. இவற்றை நடைமுறைப்படுத்தும்போது இந்தப் பிரச்சினை முழுவதும் தீரும் என்று நம்புகிறேன்.

திரு. ப. மாணிக்கம் : விசாரணைக் கைதிகளாக இருப்பவர்களில் குறிப்பாக சந்தேகக் கேசாக இருந்தால், அவர்களை 9 மாதங்களுக்குச் சிறைச்சாலையில் வைத்திருக்க வேண்டியதில்லை என்று கருதி, இரண்டு வாய்தாக்களில் நிவாரணம் இல்லையென்றால், அவர்களை விடுதலை செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியதைப் போல, பீகார் மாநிலத்தில் உள்ள சிறைக் கைதிகள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனுக்களை விசாரித்தபோது, 9 ஆண்டு காலம், 19 ஆண்டு காலம் வரை கூட அங்கே அண்டர்-ட்ரையல் பிரிசனர்கள் சிறையிலே இருப்பதாக உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, தமிழகத்திலே சிறையில் இருப்பவர்களின் கால அளவு மிகவும் குறைவாக இருக்கிறது. தற்போது இருக்கின்ற பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு 6 மாத காலத்திற்குள் முடிந்த அளவிற்கு இது போன்ற வழக்குகளைப் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் அறிவுரையை மாநில அரசு உயர் நீதிமன்றத்திற்கும், மற்ற நீதிமன்றங்களுக்கும், துறைத் தலைமை அலுவலகங்களுக்கும் அனுப்பி நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல ஒன்றிரண்டு இடங்களில் நிலைமை இருக்குமானால், அதை ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]